20.04.2026 O.S. 281/2020 பி.வா.சா.1 முருகையா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் அரசு விடுதியில் சமையளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனக்கும், கடையநல்லூரைச் சேர்ந்த முருகனுக்கும் எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் எவ்வித பழக்கமும் இல்லை. எனக்கும், முருகனுக்கும் எவ்வித பகையும் இல்லை என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் எவ்வித பகையும் இல்லை என்றால் சரிதான். வாதி யாரையும் பணம் பறிக்க வேண்டிய அவசியமில்லை என்றால் பணம் பறித்துள்ளார். நான் கடையநல்லூர் முருகனிடம் பணம் கொடுத்துள்ளேன். வாதி யாரிடம் சட்ட விரோதமாக பணம் பறித்துள்ளார் என்றால் ஒரு மருத்துவரிடம் பணம் பறித்துள்ளார், பெயர் தெரியாது. வாதி காசோலையின் அடிப்படையில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்குகள் அசல் வழக்கு எண். 281, 282/2020 என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்துக் செய்ய கோரி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 282/2020 தள்ளுபடி செய்யப்பட்டும், இந்த வழக்கில் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இதுநாள் வரை வாதிக்கு எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். எனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக கூறி வாதி, முருகன், கடையநல்லூரைச் சேர்ந்து ஒரு பாய் ஆகியோர்கள் சேர்ந்து ரூபாய் ஐம்பதாயிரத்தை பெற்றுக் கொண்டுள்ளார்கள். அதனுடன் சேர்ந்து ரூபாய் இரண்டு இலட்சமும் பெற்றுக் கொண்டு, இதே தொகைக்கு ஆதரவுக்காக காசோலையை முருகனிடம் கொடுத்தேன். வேலை வாங்கி தருவதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை, பணத்தை திரும்ப கேட்டேன். எந்த தேதியில்

ரூபாய் இரண்டு இலட்சம் வேலைக்காக கொடுத்தேன் என்றால் 2018 ம் ஆண்டு கொடுக்கப்பட்டது தேதி ஞாபகமில்லை. நான் காசோலை மற்றும் புரோ நோட் மற்றும் பணம் ஆகியவற்றை கொடுத்தேன். காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் ஒரு காசோலை மட்டும் கொடுத்தேன். அந்த காசோலையை முருகனிடம் கொடுத்தேன். நான் காசோலை மற்றும் புரோ நோட்டை திரும்ப கேட்டேன் அதற்கு முருகன் நான் காசோலை, புரோ நோட், பணம் எதுவும் வாங்கவில்லை என மறுத்துவிட்டார். புரோ நோட் அடிப்படையில் முருகன், வாதி வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. மேலக்கடையநல்லூரைச் சேர்ந்த சண்முகம் எனக்கு பகையாளி இல்லை என்றால் சரிதான். கடையநல்லூரை சேர்ந்த நந்தக்குமார் என்பவரை நான் பார்த்ததில்லை. வாதி மாவட்ட ஆட்சி தலைவரிடம் கொடுத்த மனு உண்மையா என்றால் புகார் கொடுத்துள்ளார். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையா என்றால் எனக்கு தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையா என்றால் உண்மைதான். இந்த வழக்கில் அழைப்பாணை வந்த பிறகு வாதியை பற்றி தெரியும் என்று சொல்லியது உண்மையா என்றால் உண்மை. வாதிக்கும், எனக்கும் உறவு, நட்பும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மகளுக்கு வேலை வாங்கி தருவதாக முருகனும், நாகூர் பழக்கம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மகளுக்காக வேலை வாங்கி தருவதாக கூறி முருகனிடம் பணம் கொடுத்தேனா என்றால் நான் என் மகனுக்காக பணம் கொடுத்தேன். நான் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டு காசோலைகள் கொடுத்தேனா என்றால் இல்லை, ஒரு காசோலை கொடுத்தேன். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் இரண்டு காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகளின் வேலைக்காக முருகனிடம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, எனது மகனுக்கு பணம் கொடுத்தேன். இரண்டு காசோலைகளில் ஒரு

காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், மற்றொரு காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வா.சா.1 காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். காசோலை மோசடியாக உருவாக்கப்பட்டது என்று கூறும் நிலையில் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் முருகனை நேரில் சந்தித்து நான் கொடுத்த காசோலையை பயன்படுத்தி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள விபரத்தை கேட்டேனா என்றால் கேட்டேன், காசோலையை கொடுக்கவில்லை என மறுத்துவிட்டார். நான் வாதியை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு காசோலை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை சந்தித்து வாங்காத பணத்திற்காக என் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என கேட்டேனா என்றால் கேட்கவில்லை. வாதி தென்காசி புது பஸ்ஸ்டாண்டில் பேன்சி கடையும், மருத்துவமனையில் டீ கடையும், உணவகம், எஸ்டிடி பூத் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் வாதியை வழக்கு தாக்கல் செய்த பிறகு இதுநாள் வரை பார்த்ததில்லை. வாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அலுவலகத்திற்கு உத்தரவு வந்தது அதன் மூலம் தெரியும். பள்ளிக்கல்வி துறைக்கு அந்த உத்தரவு அனுப்பப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.2 ஆவணத்தை பற்றி தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. பி.வா.சா.2 எனக்கு எப்படி கிடைத்து என்றால் தெரியாது. பி.வா.சா1 ஆவணம் எனக்கு எப்படி கிடைத்து என்றால் தெரியாது. எனது வங்கிக்கு காசோலை சம்பந்தமாக என்னுடைய கையெழுத்து இல்லை என முறையிட்டேனா என்றால் இல்லை. வாதி என்னை கஷ்ட, நஷ்டபடுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. முருகனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கபோறேனா என்றால் விசாரிப்பேன். முருகனிடம் பணம் கொடுத்தபோது கருப்பசாமி என்பவரை நான் விசாரிக்க உள்ளேன். முருகனிடம் நான் கொடுத்த தொகை நான் வட்டிக்கு வாங்கி கொடுத்தேன் .

தற்போது வரை வட்டி கொடுத்துவருகிறேன். அந்த வட்டி வாங்கிய நபர் யாரென்றால் பெயர் ஞாபகமில்லை, கடையநல்லூரை சேர்ந்தவர். எப்போது கடன் வாங்கினேன் என்றால் 2 வருடம் கடந்துவிட்டது. நான் கடன் பெற்று 2 1/2 வருடங்கள் கடந்துவிட்டது. அந்த கடன் கொடுத்த நபரை விசாரிக்க தயாராக உள்ளேன். பி.சா.வா.ஆ 2 க்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியிடம் வாங்கி கடனை மறைப்பதற்காக இல்லாத விபரங்களை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பணத்தை பெற்றுக் கொண்டு உண்மைக்கு மாறாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல. நான் வாங்கிய கடனுக்கு தானாக காசோலை கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முருகனை என்பவரை தேவையில்லாமல் சேர்த்து வழக்கை திசைதிருப்பிகிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.